# The middle Ages and the Evidence of Aquinas's God: A Philosophical Analysis

Pulenthiran Nesan

Postgraduate Institute of Humanities and Social Sciences,
Faculty of Arts, University of Peradeniya,
Pnesan92@gmail.com

**Abstract**

The main objective of this atudy is develop a philosophical analysis of the existence of St. Thomas Aquinas in the philosophy of God, especially in the philosophers who have gradually developed from Greek thought to christian philosophical thought. The main research problem of this study is that aquinas draws upon what matters from his own anbiguities and presents a concrete basis for his philosophical work. There was philosophical thought in Christian thought. The hypothesis of this study is the presence of philosophical thoghts in Christianity and Aquinas knows god as a philosophical viewpoint. Data are draw from Aquinas's book and the earlier studies based on this study and this study uses some research methods such as the Comparative and Descriptive research methods. The concept of god is based on belief and it is difficult to form a solid rational basis. Here Thomas Aquinas seeks to establish the existence of god through his conception. His philosophical belief is based on philosophizing through his deep explanation of philosophical thought.

Key Words: Middle Age, Philosophy, Aquinas.

## 1. அறிமுகம்

மனிதன் இப் பிரபஞ்சத்தில் தோன்றிய நாளிலிருந்தே அவனையும் அவனைச் சூழ இருந்த இயற்கையின் சக்திகளையும் கடந்த ஓர் அபூர்வமான சக்தியைப் பற்றிய சிந்தனையை அவன் தன்னகத்தே கொண்டிருந்தான். இந்த அபூர்வ சக்தியே இயற்கையில் நிகழும் மாற்றங்களுக்குக் காரணம் என நம்பினான். மனிதனின் சிந்தனையும் அறிவும் சற்று வளர்ச்சி பெற்ற போது இந்த அபூர்வ சக்தியை அவன் பலவாறும் விமர்சிக்கலானான். ஒரு கட்டத்திலே தன்னைச் சூழ இருந்த இயற்கையிடமிருந்து அவன் பெற்றுக் கொண்ட நன்மைத் தனங்களையும் அதேவேளை அதே இயற்கையின் சீற்றத்தினையும் அவன் கண்டபோது இந்த இயற்கையை அந்த அபூர்வ சக்தி என எண்ணி அதனை வணங்கத் தலைப்பட்டான். இவ்வாறு இயற்கை வழிபாட்டோடு ஆதி மனிதன் தன்னை ஈடுபடுத்திக் கொண்டான். இயற்கையோடு இனங்காணப்பட்ட இந்த அபூர்வசக்தி காலப்போக்கில் 'தெய்வீகம்' எனும் உன்னதமான ஒரு சிந்தனைக்குள் புகுத்தப்பட்டது.

### 1.1. நோக்கம்

இறைவனைப் பற்றிய சிந்தனை கிரேக்க மெய்யிலாளர் சிந்தனையிலிருந்து படிப்படியாக கிறிஸ்தவ மெய்யியல் சிந்தனைவரை வளர்ச்சியடைந்ததோடு குறிப்பாக மெய்யியலாளர்களில் புனித தோமஸ் அக்குவைனாஸ் நவீனத்துவம் பொருந்திய வகைகளிலே அறியாமைகளை விடுத்து இறைவனின் இருப்பை பகுத்தறிவின்

அடிப்படைகளுடன் நிரூபணம் செய்யும் முறைமையினை மெய்யியல் பகுப்பாய்விற்கு உட்படுத்தலாகும்.

### 1.2. ஆய்வுப் பிரச்சினை

அக்குவைனாஸ் தனக்கு முன்னர் காணப்பட்ட தெளிவற்ற தன்மைகளிலிருந்து எவ்வாறான விடயங்களைப் பெற்றுத் தனது மெய்யியல் செயற்பாட்டிற்கு ஓர் உறுதியான அடிப்படைகளை முன்வைக்கின்றார் என்பது முக்கிய ஆய்வுப் பிரச்சினையாகும்.

### 1.3. ஆய்வு முறையியல்

அக்குவைனாஸின் நூல்கள், இவ் விடயம் சார்ந்து மேற்கொள்ளப்பட்ட முன்னைய ஆய்வறிக்கைகள் போன்றவற்றிலிருந்து தகவல்கள் பெறப்பட்டதோடு, இவ் ஆய்வானது விபரண ஆய்வு, ஒப்பீட்டாய்வு போன்ற முறைமைகளைப் பயன்படுத்துகின்றது.

## கிரேக்க சிந்தனைப்போக்கு

ஆரம்பத்தில் தோன்றிய கிரேக்க சிந்தனைப்போக்கு கூடுதலாக உலகத்தைப் பற்றியதாக இருந்தாலும் தெய்வீகம் சார்பாக கணிசமான அளவு கவனம் அங்கு செலுத்தப்பட்டுள்ளது. சோக்கிரட்டீசுக்கு முற்பட்ட மெய்யியலாளர்கள் தெய்வீகம் எனும் கருவை இயற்கையின் சக்திகளோடேயே இனங்கண்டு கொண்டனர். அவர்களுள் சிலர் தெய்வீகம் என்பது மனிதனின் வெறும் கற்பனையே எனக்கூறினர். கெராக்கிளிட்டஸ் உலகை வழிநடத்தும் ஞானம் என்று இந்த இயற்கையின் சக்தியை விளங்கிக் கொண்டார்.

சோக்கிரட்டீஸ், பிளேட்டோ, அரிஸ்ரோட்டில் ஆகியோருடைய இறைவனைப் பற்றிய படிப்பினைகளே கிரேக்க சிந்தனைகளில் முக்கியமாகக் கருத்தில் எடுக்க வேண்டிய சிந்தனைகளாகும். சோக்கிரட்டீசினுடைய இறைவனைப் பற்றிய சிந்தனை "பராமரிப்பு" (Providence) எனும் கருவிலிருந்து பெறப்படுகிறது. தனி ஒரு தலைமைத் தெய்வத்தை பற்றிய சிந்தனையை அவர் முன்வைத்தாலும் சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் ஆகியவற்றை அந்தந்தத் தலைமைத் தெய்வத்தின் துணைத் தெய்வங்களாக விளங்கிக் கொண்டார். இந்தப் பரந்த உலகின் வியக்கத்தக்க ஒழுங்கிலிருந்து இறைவனின் இருப்பை அவர் உறுதிப்படுத்துகின்றார். உடலை ஆன்மா வழி நடத்துவது போல் இறைவன் உலகை அன்பு செய்து வழி நடத்துகிறார்.

பிளேட்டோவின் இறைவனைப் பற்றிய படிப்பினையில் பைதகோரியரின் சிந்தனை செல்வாக்குச் செலுத்துகின்றது. 'டியாட்' என்றும் 'ஒன்று' என்றும் இரு சிந்தனைகளில், 'ஒன்று' எனும் சிந்தனையை பிளேட்டோ, இறைவன் என்று கருதப்படும் நன்மைத் தளத்துடன் இனங்காண்கின்றார். டியாட்டை நிஜ உலகில் உள்ள பொருட்களுக்கேற்ப நிழல் உலகில் பொருட்களை உண்டாக்கும் "டெமுர்க்" எனும் தெய்வத்துடன் ஒப்பிடுகிறார். சுருக்கமாகச் சொல்லின் "நன்மைத்தனம்" என்பதே இறைவன்.

கிரேக்க சிந்தனைகளில் இறைவனைப் பற்றிய வளர்ச்சி பெற்ற ஆக்கபூர்வமான சிந்தனையைத் தந்தவர் அரிஸ்ரோட்டில் ஆவார். இவர் "ஓர் இறைவனை" மட்டும் ஏற்கிறார். தன்னில் தானே இயங்கிக் கொண்டு மற்றவற்றை இயக்குகின்ற ஒரு சக்தியாக இறைவனை இவர் காண்கின்றார். இவர் ஒரு பௌதீக தீர்வை முன்வைக்கின்றார். இவரது கூற்றுப்படி அசைகின்ற எந்த ஒரு பொருளும் இன்னொரு சக்தியாலேயே அசைக்கப்படுகிறது. இந்த சக்தியை இயக்குவதற்கு இன்னொரு சக்தி தேவை. இவ்வாறு இது ஒரு சங்கிலித் தொடராகச் செல்லும். ஆனால் இதை ஒரு முடிவிலித் தொடராக நாம் கருத முடியாது. ஏதோ ஓர் இடத்தில் இது முற்றுப்பெற வேண்டும். அவ்வாறு முற்றுப் பெறும் போது அந்த இடத்திலுள்ள சக்தி ஒன்றாலும் அசைக்கப்படாததாகவே இயங்கும் சக்தியாக இருக்கும். இந்தச் சக்தியே இறைவன் என்றார்.

## கிறிஸ்தவ மெய்யியல் சிந்தனை.

இவர்களுள் புனித கிளமென்ட், ஒறிஜன், ஜஸ்ரின் ஆகியோர் முக்கியமாக அடங்குவர். இவர்கள் முதலில் இறைவனைப் பற்றிய கிரேக்க சிந்தனைகளை மறுத்து அவற்றுக்கு முற்றிலும் முரணான கருத்துக்களைக் கூறினர். கிரேக்க இறை சிந்தனையில் உள்ள மூன்று பெரும் பிழைகளை இவர் எடுத்துக் கூறினார்:

1) பல கடவுள் கொள்கை
2) தெய்வங்களின் வல்லமையின்மை
3) தெய்வங்களுக்கு உலகின்மீது அக்கறை இல்லாமை

ஆனால் இவர்களின் கருத்துப்படி............

**ஒருவரே இறைவன்:** அவருக்கு ஆரம்பம் இல்லை. ஆனால் உலகின் எல்லாப் பொருட்களின் தோற்றத்திற்கும் அவரே காரணம். இறைவன் ஒருவராக இருப்பதால் அவரில் கூறுகள் இல்லை.

**இறைவன் முடிவில்லாதவர்:** இறைவனின் ஏகம் எனும் தன்மையிலிருந்தும் கூறுகள் இல்லாத ஒருமையானவர் எனும் தன்மையிலிருந்தும் இறைவன் முடிவில்லாதவர் என்பது நிரூபணமாகிறது. ஏகம் பிரிக்கப்பட முடியாததாயின் அது முடிவில்லாதது.

**இறைவன் எங்கும் உள்ளவர், எல்லாம் வல்லவர்:** இறைவன் ஒன்றுமில்லாமையிலிருந்து உலகைப் படைத்ததால் அவர் எல்லாம் வல்லவர். தெய்வீகத்தின் வல்லமைக்கும் செயற்பாடுகளுக்கும் தடைகள் இருக்க முடியாது. இறைவன் எல்லாவற்றையும் மனிதனின் சிந்தனைகளைக்கூட அறிந்திருப்பதாலும், எல்லாவற்றுக்கும் கர்த்தாவாக இருப்பதாலும், அவர் எல்லா இடத்திலும் நிறைந்துள்ளார்.

**இறைவன் பராமரிப்பவர்:** இறைவனின் பராமரிக்கும் தன்மையே இறைவனின் இருப்பை நிரூபிக்க மிக ஆணித்தரமான ஆதாரமாகும். அவரது பராமரிப்பு இந்த பரந்த உலகின் ஒழுங்கிலிருந்து தெளிவாகிறது.

**கிறிஸ்தவ பிளேட்டோனியத்திலும் கிறிஸ்தவ நவ பிளேட்டோனியத்திலும் இறைவனைப் பற்றி புனித அகஸ்ட்டீனின் படிப்பினை:** இறைவன் மீது ஆழமான விசுவாசம் கொண்டிருந்த இந்தப் புனிதருக்கு இறைவனின் இருப்பைப் பற்றி எந்தவித பிரச்சினைகளும் எழவில்லை. ஆனால் இறைவனுடைய தன்மைகள் யாவை என்று அறிவதிலேயே தனது நீண்ட காலத்தைச் செலவழித்தார். ஆனால் இறுதியில் அவர் தனது ஆய்வுகளில் குறிப்பிடத்தக்க அளவு வெற்றி காணவில்லை. இறைவனைப் பற்றி அவரது இயல்புகளைப் பற்றி அறிய மனிதனால் முடியாது. இறைவனைப் பற்றி அல்லது அவரது இயல்புகளை எடுத்துக்கூற மனித மொழி ஒரு ஏற்ற கருவியல்ல. ஆனால் இறைவன் முன்னிலையில் மனித மொழிக்கு மதிப்புண்டு. ஏனென்றால் இறைவன் எப்படியானவர் என்று கூறுவதிலும் பார்க்க எப்படியல்லாதவர் என்று கூறலாம். நாம் உலகில் உள்ள எல்லாவற்றையும் பார்க்கின்றோம். ஆனால் அவை எல்லாம் இறைவனல்ல. ஆயின் இறைவன் என்றால் என்ன? இறைவனை நாம் விளங்கிக் கொள்ள முடியாதுள்ளது. ஆனால் அதேவேளை அவரை நாம் புகழாமல் இருக்க முடிவதில்லை. காரணம் நாம் இறைவனின் படைப்புக்கள். இவையே புனித அகஸ்ட்டீனின் இறைவனைப் பற்றிய சிந்தனைகள்.

## 2. பகுப்பாய்வு: தோமஸ் அக்குவைனாஸின் கடவுள் பற்றிய நிரூபணம்

இறைவனைப் பற்றி மிக திட்டவட்டமான மிக வளர்ச்சியடைந்த எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய சிந்தனைகளை வெளியிட்டவர் புனித தோமஸ் அக்குவைனாஸ் ஆவார். இவரது முக்கிய படிப்பினை இறைவன் 'ஒருவர்' என்பதே. இந்தக் கருத்து கிறிஸ்தவ இடைக்கால மெய்யியல் தோன்ற முன்னர் தோன்றிய யூத இஸ்லாமிய இடைக்கால மெய்யியலாளரில் காணப்படுகிறது.

தோமஸ் அக்குவைனாஸ் (1227-1274) மெய்யியலையும் இறையியலையும் ஒரு திட்டமான வரையறுக்குள் உட்படுத்தினார். மெய்யியலின் விடயப் பொருள் எதுவாயினும் அது அனைத்தும் விவாதத்துக்கு உள்ளாக்கப்படுகின்றது. மனித அறிவை பயன்படுத்தி அல்லது பகுத்தறிவின் ஊடாக வாதங்களின் மூலம் பெறப்படும் உண்மைகளை கண்டறிவதற்கு அல்லது அதை விளக்குவதற்கு மெய்யியல் முயல்கின்றது. இறையியலின் பொருளும் அதன் உள்ளடக்கமும் நம்பிக்கையாகும். இன்னொரு வகையில் கூறுவதானால் இறைவாக்கின் மீது அமைந்த உண்மையாகும். இங்கு இந்த உண்மைகளை நிறுவுவதற்கு பகுத்தறிவோ அல்லது வாதமோ முன்வைக்கப்படுவதில்லை. அதுமாத்திரமின்றி மெய்யியல் இறையியல் ஆகிய இரு துறைகளும் ஒரு வகையில் ஒன்றின் மேல் ஒன்று கலந்த நிலையிலும் உள்ளன. எந்தவொரு உண்மையும் பகுத்தறிவோடு முரண்படக்கூடியதல்ல. மறைபொருளான நம்பிக்கை விடயங்கள் அறிவு ரீதியற்றவை என்ற வரையறைக்குள் கொண்டு வர முடியாதவை. இதை மனித அறிவாற்றலுக்கு அல்லது மனிதப் புரிதலுக்கு அப்பாற்பட்டதொன்று என்று கூறுவதே பொருத்தமானதாகும்.

கடவுளின் இருப்பை இறைவாக்கின் உதவிக்கு அப்பால் பகுத்தறிவினால் நிரூபிக்க முடியும் என்றும் இதை அரிஸ்ரோட்டில் நிறைவேற்றியுள்ளதாகவும் அக்குவைனாஸ் கூறுகின்றார். இது போலவே ஏனைய இறையியல் அம்சங்களையும் பகுத்தறிவு விளக்கத்திற்கு

உள்ளாக்க முடியும். உண்மையில் மெய்யியலின் ஒரு பெரிய பகுதி இறையியலின் கரிசனைக்குரிய விடயங்களாக ஆகி இருந்ததோடு அது இயற்கை இறையியல் ஆக வளர்ச்சி பெற்று இருந்ததையும் மத்திய கால கிறிஸ்தவ, இஸ்லாமிய மெய்யியல் இறையியல் பங்களிப்புக்களில் அவதானிக்க முடிகின்றது.

அரிஸ்ரோட்டிலின் சிந்தனையினூடாக மெய்யியலையும் இறையியலையும் படிக்க வேண்டும் என அவர் விரும்பினார். மெய்யியலுக்கும் இறையியலுக்கும் இடையிலான முரண்பாட்டைத் தீர்ப்பதில் அரிஸ்ரோட்டிலிய மெய்யியலை அவர் கையாண்டார். மெய்யியலுக்கும் இறையியலுக்குமிடையில் உள்ள வேறுபாட்டை சமநிலைப்படுத்தும் போக்கு அவரிடம் இருந்தது.

புளோட்டினஸின் நவ பிளோட்டோனிய வாதம் இக்காலத்தில் சமய கோட்பாடுகளுக்கு மிக வாய்ப்பான கருத்துப் பின்னணியை வழங்கியது. ஆனால் முஸ்லிம் சிந்தனையாளர்களுக்கு நன்றி சொல்வது பொருத்தமானது. ஏனெனில் அவர்கள் அரிஸ்ரோட்டலின் விரிவான சிந்தனைகளுடன் பிரவேசித்தனர். இது மத்திய யுகத்தின் இரண்டாம் கட்டத்திற்குரிய முக்கிய நிகழ்வாகியது. இக்காலத்தில் அரிஸ்ரோட்டிலின் சிந்தனை விரிவாக்கம் பெற்றதோடு போதிய அங்கீகாரத்தைப் பெற்றதாகவும் மாறியது.

## தோமஸ் அக்குவைனாஸின் கடவுள் இருப்புக்கான நிரூபணங்கள்

மத்தியகால சிந்தனையாளர்களைப் பொறுத்தவரை கடவுள் இருப்பு பற்றிய வாதங்களும் நிரூபணங்களும் எல்லாப் பிரச்சினைகளுக்கும் அடிப்படையாக எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தன. தோமஸ் அக்குவைனாஸின் கடவுள் இருப்புக்கான நிரூபணங்கள் மிகப் புகழ் வாய்ந்தவையும் இன்று வரையும் தொடர்ந்தும் விவாதிக்கப்பட்டு வருபவையுமாகும். அக்குவைனாஸ் இந்த நிரூபணங்களை மேம்படுத்துவதற்கு பல காரணங்கள் இருந்துள்ளன. நம்பிக்கையை முற்றாக விளங்கிக் கொள்வது கடினமானதாக இருந்தாலும் நம்பிக்கைக்கு ஒரு பகுத்தறிவு அடிப்படை இருப்பதாக அக்குவைனாஸ் சிந்தித்தார். அக்குவைனாஸின் கருத்து முதலில் மனமானது ஒரு தூய நிலையில் உள்ளது. எல்லா அறிவும் அனுபவத்தினால் சுவீகரிக்கப்படுகின்றது. ஆகவே அக்குவைனாஸ் கடவுள் பற்றிய அறிவு உடன்பிறந்த நிலையில் மனத்தில் உள்ளது என்பதை நிராகரிப்பதாக கருதலாம். அதேவேளை அக்குவைனாஸ் கடவுளின் இருப்புக்கு நிரூபணங்கள் தேவை என்று கருதினர். அவர் ஒரு அரிஸ்ரோட்டிலியனாக இருந்ததினால் கருத்துக்களின் முதன்மைத் தன்மையை நிராகரித்தார். அதனால் அவர் கடவுளின் இருப்பு பற்றிய உள்பொருள் வாதத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. ஏனெனில் உண்மை கருத்துக்களிலிருந்து தோன்றுவதாக அவர் எண்ணவில்லை. இதை மிக எளிமையாகக் கூறுவதாயின் தங்க நகை என்று சிந்தித்ததும் அங்கு உண்மையான தங்க நகை இருப்பதில்லை. அதேவேளை அக்குவைனாஸ் எல்லா அறிவுக்கும் கடவுள் மாத்திரமே மூலமாவார் என்பதையும் ஏற்றுக் கொள்ளவில்லை. மேலும் கடவுள் அவரது கருத்தில் நேரடியான உள்ளுணர்வுப் பொருளும் அல்ல. அது பிரதிபலிப்புக்களின் மூலமான தோன்றுகையாகும். அதனால் கடவுளின் இருப்பு பற்றிய நிரூபணங்கள் கடவுள் மீதான

மனிதனின் பிரதிபலிப்பாகும். முன்னர் குறிப்பிட்டது போல அக்குவைனாஸ், கருத்திலிருந்து உண்மைக்கு போவதை நிராகரித்திருந்த போதிலும் கடவுள் இருப்புக்கான பின்னது ஏதுவான நிரூபணத்தை அவருடைய நேரடியான கருத்து உலகு பற்றிய அனுபவம் என்பதை கூறுகின்றது. இந்த பின்னணியிலிருந்துதான் அவரது கடவுளின் இருப்பு பற்றிய ஐந்து நிரூபணங்களை நாம் நோக்க வேண்டும். அவையாவன:-

1. இயக்கம்
2. செயல்படும் காரணங்கள்
3. தொடர்ச்சியான தற்செயல் காரணங்கள்
4. இயல்திட்டவாதம்
5. உயர்தரவாதம்

இந்த ஐந்து நிரூபணங்களிலும் மூன்று நிரூபணங்கள் முக்கியமானவை, அடிப்படையானவை. அவை அரிஸ்ரோட்டிலினுடையவை கருத்தில் இவ்வுலகானது முடிவுற்றது. அதனால் அடிப்படையில் இந்த உலகானது முடிவற்ற அடிப்படையை பெற்றுள்ளது. அக்குவைனாஸ் கருத்தில் உலகம் படைக்கப்பட்டது. அதனால் அது அழியக்கூடியது. இந்த பின்னணியில் அரிஸ்ரோட்டிலிய நிரூபணங்களும் அக்குவைனாஸின் நிரூபணங்களும் சில வேறுபாடுகளை பிரதிபலிக்கின்றன. இந்த மூன்று நிரூபணங்களும் பிரபஞ்சத்தையும் பிரபஞ்ச அடிப்படைகளையும் கொண்டு அமைக்கப்பட்டதால் இந்த வாதங்களை பிரபஞ்ச ரீதியானவை எனக் கூறுவது பொருத்தமானது. அதிகமான மத்தியகால கடவுள் நிரூபணங்கள் கடவுள் நிராகரிப்பாளர்களுக்காக அல்லது நாத்திகர்களுக்காக அன்றி கடவுள் பற்றிய தெளிவின்மையோடு இருப்பவர்களுக்கு அல்லது ஒரு வகை குழப்பத்தில் இருப்பவர்களுக்கு பொருந்தக்கூடிய வகையிலேயே அவை முன்வைக்கப்பட்டிருக்கின்றன.

**முதலாவது நிரூபணம்**

உலகில் ஒரு இயக்கம் ஒன்றுள்ளது. அதனால் இது அனுபவ அடிப்படையைக் கொண்டது. அது இயக்கத்தில் இருக்கின்றது. அது இன்னொன்றினால் இயக்கப்படுகின்றது. இது ஒரு சங்கிலித் தொடரைப் போல ஒன்றின் இயக்கத்திற்கு இன்னொன்று என்று செல்கின்றது. உதாரணமாக A, B யை இயக்குகிறது. B, C யை இயக்குகிறது. இதன் தொடர்ச்சி இவ்வாறு செல்லும். ஒன்றன்பின் ஒன்றாக இத்தொடர்ச்சிகள் முடிவிலி நிலையை உடையவை. ஆனால் இது என்றைக்குமாக முடிவுற்றுச் செல்லும் ஒன்றல்ல. இத்தொடர்ச்சிக்கு உண்மையில் ஒரு 'முதல் இயக்கி' ஒன்று இருக்க வேண்டும். இது 'இயங்கா இயக்கி' என்று அரிஸ்ரோட்டிலிய சிந்தனையில் இடம் பெறுகிறது. இது அக்குவைனாஸின் சிந்தனையின்படி அது கடவுளைக் குறிப்பதாகும்.

**இரண்டாவது நிரூபணம்**

ஒவ்வொரு காரணியும் இன்னொரு காரணியால் இயக்கப்படுகின்றது. அதனால் செயன்நிலை காரணி ஒன்று இல்லை. ஒரு விடயம் அது ஒரு காரணியாக இருந்தால் அது அதற்கு

முன்னதானதாக இருக்க வேண்டும். இது ஒரு முடிவற்ற நிலைக்குத் தொடர்கின்றது. இந்த முடிவற்ற நிலையை ஒரு முற்றுப் புள்ளி நிலைக்கு கொண்டு வருவது முதல் செயன்நிலைக் காரணியாகும். இதுவே கடவுள்.

**மூன்றாவது நிரூபணம்**

இதன் பொருள் ஒரு பொருள் இப்போது இருக்கின்றது. இன்னொரு நேரத்தில் அது இல்லாமல் போகின்றது. அதாவது ஒரு பொருளுக்கு இருப்பதற்கு ஒரு தளம் இல்லாமல் போகின்றது. இருப்பதற்கு இயலக்கூடிய ஒரு பொருள் இப்போது அதன் இருப்பை பெற்றுக் கொள்ளவில்லை. அதனால் பொருள்கள் இருக்கின்றன அல்லது இல்லாமலும் போகின்றன. ஆகவே எல்லாமே இல்லாமல் போனால் ஒரு கட்டத்தில் ஒன்றும் இல்லாமல் போகலாம். ஆனால் பொருள்கள் இருக்கின்றன. அதனால் எல்லாப் பொருள்களும் இருந்து இல்லாமல் போகின்றவை அல்ல. ஆகவே எல்லாவற்றையும் இருப்புக்குரியதாக்கும் ஒன்று இருக்க வேண்டும். அது அதன் இருப்புக்காக அதற்குரிய தளத்தை அது செயற்படுத்திக் கொள்ளக்கூடியது. அதாவது ஒரு கட்டாயமான ஒன்றின் இருப்பு என்பது அதன் அவசியம் என்ற நிலையில் இருக்கும் பொருள் ஒன்று உள்ளது என்பதுதான் கடவுளாக இருக்க வேண்டும்.

இந்த மூன்றாவது வாதத்தை அக்குவைனாஸ் ஒரு முக்கியமான வாதமாகக் கருதினாலும் ரஸலும், ஏ.ஜே. அயரும் இதை ஒரு போலிப்பிரச்சினை என்று வர்ணிக்கின்றார். உலகம் இருக்கின்றது. அது ஒரு உண்மை. அதற்கென்று எந்தவொரு விளக்கமும் தேவையில்லை. அதை விளக்குவதற்கு அதனுள் அடக்கமான ஒன்றோ அல்லது அதற்கு வெளியில் என்று ஒன்றோ தேவையில்லை. இந்த உலகானது அதன் முழுமையான தன்மையில் அதை விளங்கிக் கொள்வது என்பது ஒரு பௌதீகவதீதப் பிரச்சினையாகும். பௌதீகவதீதப் பிரச்சினை ஒரு கருத்தற்ற பிரச்சினை என அயர் கூறுகின்றார் (A.J Ayer, F.C.S.Coplesion (logical positivism ed. A.J,Ayer)in y.maish 1994).

**நான்காவது நிரூபணம்**

உலகில் காணப்படும் ஒழுங்குமுறை, இயற்கை நிகழ்வுகளின் திட்டமிட்டது போன்ற செயற்பாடுகள், உதாரணமாக பருவ காலங்கள் மாறி வருவது, கோள்களின் சுற்றோட்டம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு நோக்கக் கொள்கை அமைந்துள்ளது. அக்குவைனாஸினுடைய நோக்கின்படி இயற்கைப் பொருள்கள் எந்தவிதமான உணர்வோ அல்லது அறிவோ இன்றி ஒரு முடிவை அடையும் வரை அல்லது இலக்கை அடையும் வரை செயற்பாட்டில் உள்ளன. இவ்வாறு இலக்கை அவை அடைவது அவற்றின் வடிவமைப்பின் வழி நிகழ்வதாகும். அதனால் இந்த இலக்கு அல்லது முடிவு ஒரு அறிவுள்ள பத்திபூர்வமான ஒன்றினால் கட்டமைக்கப்பட்டிருக்க வேண்டும். அதுதான் கடவுள். உண்மையில் இந்தவாதம் ஒரு நிர்மானிப்பாளனை எமது கண்முன் கொண்டு வருகின்றதே அன்றி உலகப் படைப்பாளன் கடவுள் என்பதை அல்ல. உண்மையில் இந்த நிரூபணம் என்ன கூறுகின்றது. அதாவது ஒரு புத்தியுள்ள இருப்புடைய ஒன்று உள்ளது. அது

முடிவுகளை வடிவமைக்கின்றது. ஆனால் படைப்புக் கடவுள் வடிவமைப்பையும் முடிந்தவரை உட்படுத்தியதாகவே பொருள்களைப் படைத்திருக்க வேண்டும். காண்ட் இதைப்பற்றிக் கூறும்போது இது ஒரு பழமை வாய்ந்த நிரூபணம் என்றும் மனித பகுத்தறிவுக்கு பொருந்தக்கூடிய தெளிவான ஒன்று என்றும் குறிப்பிட்டுள்ளார். இது பிளேட்டோவினால் தெளிவாக முன்வைக்கப்பட்டிருந்தது.

**ஐந்தாவது நிரூபணம்**

உலகில் உள்ள பொருள்கள் குறைவாகவோ கூடியதாகவோ நல்லவகையாக உள்ளன. உண்மையாகவும், மேன்மை மிக்கதாகவும் உள்ளன. இது ஒரு பொருளின் பூரணத்துவம் பற்றிய கருத்துக்கு எம்மை இட்டுச் செல்கின்றது. அதாவது கூடிக்குறைந்த நிலையிலின்றி பூரணத்துவமான நன்மை பூரணத்துவமான உண்மை முதலியனவாக இது விபரிக்கப்படுகிறது. ஆகவே இந்த உலகில் எல்லா வகை பரிபூரணத்துவத்திற்கும் காரணமான ஒரு பரிபூரணம் இருக்க வேண்டும். அந்தப் பரிபூரணமான ஒன்று கடவுள் ஆகும்.

**முடிவுரை**

மேற்கத்தேய, மத்தியகால மெய்யியல் சிந்தனையில் இறைவனைப் பற்றிய சிந்தனை கிறிஸ்தவ மெய்யியலாளரான தோமஸ் அக்குவைனாசின் படிப்பினையில் ஒரு முழுமையான வளர்ச்சியைக் கண்டது என்பது மறுக்க முடியாத உண்மை. ஏனைய சிந்தனையாளர்களைப் போன்றல்லாது இவர் அரிஸ்ரோட்டலியச் சிந்தனைகளை அடிப்படையாகவும். அராபிய முஸ்லிம் மெய்யியலாளர்களது கருத்துக்களையும் வாசிப்புக்குட்படுத்தி தனது நிரூபணத்தினைமேற் கொண்டமையினால் முக்கியம் பெறுகின்றது. இவ் ஆய்விலும் அவ்விடயம் தெளிவுறுத்தப்படுகின்றமையினை அவதானிக்கலாம். அக்குவைனாசினுடைய கருத்துக்கள் தற்கால மெய்யிலாளர்களினால் பலவாறாக விமர்சிக்கப்பட்டாலும் அதனுடைய மதிப்பு குறிப்பாக கத்தோலிக்க திருச்சபையில் தொடர்ந்து பேணப்பட்டு வருகிறது. இறுதியாக ஒரு தெய்வக் கொள்கையை ஏற்றுக்கொள்ளும் எந்த மதத்திற்கும் அக்குவைனாசினுடைய இறைவன் பற்றிய சிந்தனை மிக இலகுவாகப் பொருந்தும் ஒன்றாகும்.

**உசாத்துணை**

Seyyed Hossein Nasr, (2001) History of Islamic Philosophy, George Washington university, Routledge Publications. USA.

Sharif, M. M., (ed), (1983) History Of Muslim Philosophy, volume I, Pakistan Philosophical Congress, Pakistan.

Teodoro De LA Torre, (1988) Popular History of Philosophy, Lumen Christi Press.

Winter, T., (2008) Classical Islamic Theology, Cambridge University Press.

அனஸ், எம், எஸ், எம்., (2006) "மெய்யியல் கிரேக்கம் முதல் தற்காலம் வரை" குமரன் புத்தக இல்லம், கொழும்பு - சென்னை.

.............................. (2003) "மெய்யியல் அறிமுக உரைகள்" பண்பாட்டு ஆய்வு வட்டம், பேராதனை.

ஞானகுமாரன். நா., (2003) "மெய்யியல்" செல்வம் வெளியீடு, பருத்தித்துறை, யாழ்ப்பாணம்.

நாராயணன். க., (1985) "மேலைநாட்டு மெய்ப்பொருள்" (சோக்கிரடீஸ் முதல் சார்த்தர் வரை) தமிழ்ப்புத்தகாலயம், சென்னை.

ஜமாஹீர். பீ. எம்., (2010)"மெய்யியல் பிரச்சினைகளும் பிரயோகங்களும்" நதா வெளியீடு: கண்டி - இலங்கை.